කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව
வளிமண்டலவியல் திணைக்களம்
Department of Meteorology

TP : 011 2686686
Fax : 011 2691443
E-mail : metnmc@gmail.com
Web : www.meteo.gov.lk

அறிக்கை இல : 21 TCA/26/01/10/05

நிறம் : **சிவப்பு**

**இலங்கைக்குக் கிழக்காக தாழமுக்கம் தொடர்பான எச்சரிக்கை:**

இயற்கை அனர்த்தம் தொடர்பான முன்னெச்சரிக்கை நிலையத்தினால்,
2026 ஜனவரி 11ஆம் திகதி பிற்பகல் 2.30 மணி வரை செல்லுபடியாகும் வகையில்
2026 ஜனவரி 10ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியில் வெளியிடப்பட்டது.

**நாட்டின் நிலப்பகுதிகளுக்கும் நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளுக்கும்: நடவடிக்கை எடுக்கவும்!**

**தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளுக்கு மேலாக காணப்படுகின்ற தாழமுக்கமானது 2026 ஜனவரி 10ஆம் திகதி காலை 11.30 மணிக்கு முல்லைத்தீவுக்கு கிழக்காக ஏறத்தாழ 20 கிலோ மீற்றர் தூரத்தில் நிலை கொண்டிருந்தது. அது இன்று மாலையளவில் முல்லைத்தீவுக் கரையைக் கடக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இத் தொகுதி நாளையளவில் ஒரு குறைந்த அழுத்தப் பிரதேசமாக வலுவிழக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.**




Figure- Depression Track. Source: RSMC

**කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව**
**வளிமண்டலவியல் திணைக்களம்**
**Department of Meteorology**

TP : 011 2686686
Fax : 011 2691443
E-mail : metnmc@gmail.com
Web : www.meteo.gov.lk

**நிலப்பகுதிகளுக்கு:**
**அடுத்த 24 மணித்தியாலங்களுக்கான பலத்த காற்று தொடர்பான ஆலோசனை:**

வடக்கு மாகாணத்தில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-60 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் மிகப் பலத்த காற்று வீசக் கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 70 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வடமேல் மாகாணத்திலும் மாத்தளை, திருகோணமலை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව
வளிமண்டலவியல் திணைக்களம்
**Department of Meteorology**

TP : 011 2686686
Fax : 011 2691443
E-mail : metnmc@gmail.com
Web : www.meteo.gov.lk

**அடுத்த 24 மணித்தியாலங்களுக்கான பலத்த மழைவீழ்ச்சி தொடர்பான ஆலோசனை:**

**நாட்டின் வட அரைப்பாகத்தில் மேகமூட்டமான வானம் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வடக்கு மாகாணத்திலும் புத்தளம், அனுராதபுரம் மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. வடக்கு மாகாணத்தில் சில இடங்களில் 100 மி.மீ க்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.**



කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව
வளிமண்டலவியல் திணைக்களம்
Department of Meteorology
TP : 011 2686686
Fax : 011 2691443
E-mail : metnmc@gmail.com
Web : www.meteo.gov.lk

நிலப்பகுதிகளுக்கு:

எதிர்பார்க்கப்படும் சேதங்கள்:

- கொட்டில்கள், தற்காலிகக் கொட்டகைகள் மற்றும் இலேசான கட்டமைப்புகளுக்கு சேதங்கள் ஏற்படலாம்
- கூரை முகடுகள், தகரங்கள் அழிக்கப் படலாம்
- மின்சார மற்றும் தொலைத்தொடர்பு கம்பிகளுக்கு சேதங்கள் ஏற்படலாம்
- மரக் கிளைகள் முறிந்து விழலாம், மேலும் பாரிய மரங்கள் வேருடன் சாயலாம்
- நெல் வயல்கள், வாழைத் தோட்டங்கள், பப்பாசி மரங்கள் மற்றும் பழத் தோட்டங்களுக்கு சேதங்கள் ஏற்படலாம்
- துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கும் படகுகளுக்கு சேதங்கள் ஏற்படலாம்
- சடுதியான வெள்ளம் ஏற்படலாம்
- கரையோரத்திற்கு அண்மையில் உள்ள பிரதேசங்களில் தாழ் நிலப் பகுதிகளில் கடல் நீர் உட்புகலாம்

நிலப்பகுதிகளுக்கு ஆலோசனை வழங்கப்படும் நடவடிக்கைகள்:

- கரையோரத்திற்கு அண்மையில் கொட்டில் வீடுகளில் வசிப்போர் பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம் பெயரவும். பாதிக்கப்படும் பகுதிகளில் உள்ள ஏனைய மக்கள் வீடுகளின் உள்ளேயே தங்கியிருக்கவும்
- மலைப்பகுதிகளிலும் (குறிப்பாக மண்சரிவு ஏற்படக்கூடிய இடங்களில்) தாழ்வான ஆற்றங்கரைகளிலும் வசிக்கும் மக்கள் இவ்விடயத்தில் அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றீர்கள்
- மலைப்பகுதிகளில் வீதிகளைப் பயன்படுத்தும் சாரதிகளும் பொதுமக்களும் இவ்விடயத்தில் அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றீர்கள்
- விழுந்த மரங்கள், மின்கம்பிகள் குறித்து அவதானமாக இருக்கவும்.
- இடி முழக்கத்தின் போது கம்பித்தொடர்புள்ள தொலைபேசி மற்றும் மின்னிணைப்பிலுள்ள மின் உபகரணங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளவும்.
- பொதுமக்கள் மிகவும் மோசமான வானிலை குறித்து அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறீர்கள்.
- அவசர உதவிகளுக்கு உங்கள் பிரதேச அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகளைத் தொடர்பு கொள்ளவும்.
- இவ்விடயம் தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களத்தால் வழங்கப்படும் எதிர்கால முன்னறிவிப்புகள் மற்றும் அறிக்கைகள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள்.

කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව
வளிமண்டலவியல் திணைக்களம்
Department of Meteorology

TP : 011 2686686
Fax : 011 2691443
E-mail : metnmc@gmail.com
Web : www.meteo.gov.lk

**கடற்பரப்புகளுக்கு:**

Advisory for depression over Southeast Bay of Bengal.
Issued at 02.30 p.m. on 10 January 2026 for the period until 02.30 p.m. 11 January 2026.



කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව
வளிமண்டலவியல் திணைக்களம்
Department of Meteorology

TP : 011 2686686
Fax : 011 2691443
E-mail : metnmc@gmail.com
Web : www.meteo.gov.lk

**கடற்பரப்புகளுக்கு ஆலோசனை வழங்கப்படும் நடவடிக்கைகள்:**

- **கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் கொழும்பிலிருந்து புத்தளம், மன்னார் மற்றும் காங்கேசந்துறை ஊடாக திருகோணமலை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட ஆழம் கூடிய மற்றும் ஆழம் குறைந்த கடற்பரப்புகளில் மறு அறிவித்தல் வரை நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு எச்சரிக்கப்படுகிறார்கள்.**
- **பல நாள் மீன்பிடிக் கலங்கள் புத்தளத்திலிருந்து மன்னார் மற்றும் காங்கேசந்துறை ஊடாக திருகோணமலை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட ஆழம் கூடிய மற்றும் ஆழம் குறைந்த கடற்பரப்புகளில் மறு அறிவித்தல் வரை மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு எச்சரிக்கப்படுகிறார்கள்.**

- கொழும்பிலிருந்து காலி, ஹம்பாந்தோட்டை மற்றும் மட்டக்களப்பு ஊடாக திருகோணமலை வரையான ஆழம் கூடிய மற்றும் ஆழம் குறைந்த கடற்பரப்புகளில் மீன்பிடி மற்றும் கடல்சார் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு விடுக்கப்பட்ட எச்சரிக்கை விலக்கப்பட்டுள்ளது.

- தென்மேற்கு வங்காள விரிகுடா ஆழம் கூடிய கடற்பரப்புகளில் பல நாள் மீன்பிடி மற்றும் கடல்சார் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு விடுக்கப்பட்ட எச்சரிக்கை விலக்கப்பட்டுள்ளது.

**கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களத்தால் வழங்கப்படும் எதிர்கால முன்னறிவிப்புகள் மற்றும் அறிக்கைகள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள்.**

**வளிமண்டலவியல் திணைக்களம் இத் தொகுதியின் நடத்தையை தொடர்ந்து கண்காணித்து வருகிறது. இவ்விடயம் தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களத்தால் வழங்கப்படும் எதிர்கால முன்னறிவிப்புகள் மற்றும் அறிக்கைகள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு பொதுமக்கள் வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள்.**

கடமை வளிமண்டலவியலாளர்
வளிமண்டலவியல் திணைக்களம்

0112 686 686 (24 மணி நேர அவசர அழைப்பு சேவை)